**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 209/2006**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–4 நாராயணசாமி –** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். இந்த வழக்கு நடக்கும் விபரம் எப்போது தெரியும் என்றால் சுமார் 10 வருடத்திற்கு முன்பு தெரியும். இந்த வழக்கில் நானோ, எனது சகோதரர்களோ அல்லது எனது குடும்பத்தை சேர்ந்தவர்களோ எங்களை தரப்பனிர்களாக சேர்க்க வேண்டும் என கோரி மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. 3 ம் பிரதிவாதி எனது தகப்பனார் என எனது முதல் சாட்சியத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பாட்டனார் பெயர் தெரியுமா என்றால் ராமன். சாட்சி மீண்டும் எனது தகப்பனாரின் பாட்டனார் பெயர் அழகன் என கூறுகிறார். எனது தகப்பனாரின் பாட்டனாருக்கு யார், யார் வாரிசுகள் என்றால் லக்கன், ஆறுமுகம், ராமன் ஆகியோர் வாரிசுகள். எனது பாட்டனார் ராமன் எந்த வருடம் இறந்தார் என்றால் வருடம் தெரியாது.

2) எனது தகப்பனார் அழகன் எப்போது இறந்தார் என்றால் 1993 ல் இறந்தார். எனது தகப்பனாருக்கு செல்லத்துரை, ராஜேஸ்வரி மற்றும் நான் ஆகியோர் வாரிசுகள். எனது தாயார் பெயர் சிறும்பாயி. எனது தாயார் இறந்து சுமார் 7, 8 வருடங்கள் இருக்கும். எனது மகன் கிருஷ்ணமூர்த்தியா என்றால் ஆமாம். எனது தம்பி செல்லத்துரையின் மகன் கார்த்திக் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சா.சா.ஆ.3 ஆவணமானது நானும், எனது தம்பியும் சேர்ந்து எனது மகனுக்கும், எனது தம்பி மகனுக்கும் எழுதிக் கொடுத்தது என்றால் சரிதான். சா.சா.ஆ.3 ஆவணம் நானும், எனது தம்பியும் தயார் செய்ததா என்றால் ஆமாம். சா.சா.ஆ.3 ஆவணத்துடன் ஒரு பட்டா இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் எனது பெயரோ, எனது தம்பி, தங்கை, தாயார் பெயரோ இல்லை என்றால் சரிதான். அது பூர்வீக சொத்து.

3) எனது பாட்டனார் பெயரில் இருந்து தகப்பனாருக்கு வந்து, வாரிசு அடிப்படையில் எங்களது மகன்களுக்கு கொடுத்துள்ளோம். மேற்படி பட்டாவில் உள்ள ராமன், ஆறுமுகம், அழகர்சாமி, அழகன் ஆகியோர் உயிரோடு இல்லை என்றால் சரிதான். எங்கள் பெயரை வாரிசு அடிப்படையில் மேற்படி பட்டாவில் சேர்க்க மனு கொடுத்துள்ளோமா என்றால் கொடுத்துள்ளோம். அந்த மனுவை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எங்கள் பெயரை பட்டாவில் சேர்ப்பதற்கு முன்பாகவே சா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். சா.சா.ஆ.3 ஆவணம் எந்த வருடம், மாதம், தேதி ஏற்பட்டது என்றால் 2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஏற்பட்டது. சா.சா.ஆ.3 ஆவணம் எழுதிய போது மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்து சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் மேற்படி வழக்கில் நாங்கள் தரப்பினர் அல்ல.

4) இந்த வழக்கில் வாதி, பிரதிவாதிகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியான எனது தகப்பனார் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் அவர் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக 1986 லிருந்தே வழக்கு நடந்துவரும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1986ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 1995ம் வருடம் குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மேல்முறையீடு 2004ம் வருடம் முடிவாகும் வரை 3ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்தி வந்தார் என்றால் அதுபற்றி தெரியாது.

5) வழக்கில் உள்ள 3ம் பிரதிவாதி அழகன் என்பவர் வேறு என்றும், எனது தகப்பனார் வேறு என்றால் சரியல்ல. எனது தகப்பனார் அழகன் 1994ல் உயிருடன் இல்லை. நான், எனது தம்பி, சகோதரி மூவரும் சேர்ந்து அழகன் என்ற பெயர் ஒற்றுமையை பயன்படுத்தியும், எங்கள் பெயரில் எந்தவிதமான ஆவணங்களும் இல்லாமல் சா.சா.ஆ.3 ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி மோசடி ஆவணம் குறித்து எனது பெயரிலும், எனது குடும்பத்தார்

பெயரிலும் வாதிகள் நடவடிக்கை எடுக்க உள்ளனர் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி எனது தகப்பனார் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தது என்றால் மும்மூர்த்தி அழைத்து வந்தார்.

6) தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகளும், நானும் அன்னியர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கே என்ன சர்வே எண் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்தின் நான்குபுறங்களிலும் உள்ள நிலங்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் சா.சா.ஆ.3 ஆவணத்தில் எத்தனை பங்கு சொத்தை எனது மகனுக்கு எழுதிக் கொடுத்தேன் என்றால் 6ல் 1 பங்கு சொத்தை கொடுத்துள்ளேன். சா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கு பாகப்பிரிவினை பத்திரம் ஏதாவது ஏற்படுத்தியுள்ளோமா என்றால் இல்லை. சா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தியதால்தான் எங்கள் குடும்பத்திற்குள்ளாகவே தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் உள்ள நபர்கள் யாரும் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரியல்ல.

7) எனக்கு தாவா சொத்தை பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாததால்தான் தாவா சொத்தின் நான்குபுற எல்லைகள் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தில் நாங்கள் இல்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3 ஆவணம் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3ன் அடிப்படையில் எங்கள் குடும்பத்திற்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. மும்மூர்த்தி ராஜா தயார் செய்த வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து, அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**